பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 19 | புதன்கிழமை | 04.12.2024 | அதிர்வு 124

## வடமராட்சியில் பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

யாழ். வடமராட்சியில் மாட்டை மேய்ச்சலுக்குக் கட்டச் சென்ற வயோதிபர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார். 06

# சுயநிர்ணய உரித்துகள் அங்கீகரிக்கப்பட்டால் அநுர அரசுடன் இணைந்து பயணிக்கத் தயார்

## சபையில் தமிழரசின் எம்.பி. சிறீதரன் அறிவிப்பு




"புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் இனவாத மற்ற இலங்கை நாட்டில் தமிழர்களது சுயநிர்ணய உரித்துகள் அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகுமானால், நாங்கள் உங்களோடு இணைப்பங்காளர்களாகப் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியிருந்த நிலையில், சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு

# ஜனாதிபதி – தமிழரசு இந்த வாரம் சந்திப்பு

## அதன்போது மாகாண சபை முறைமை தொடர்பில் பேசுங்கள் என்று சாணக்கியனுக்கு அமைச்சர் பதில்




**"இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதன்போது மாகாண சபை முறைமை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளலாம்."**

**-இவ்வாறுசபைமுதல்வரும்அமைச்சருமானபிமல்ரத்நாயக்க,இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் தெரிவித்தார்.** 06

# அர்ச்சுனா எம்.பி. தாக்கப்பட்டாரா? நாடாளுமன்றில் நேற்று பரபரப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய் பெரேரா தன் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய அர்ச்சுனா எம்.பி., 06







ஆட்சி மாறினாலும் கதிரை பறிபோகாமல் பார்த்துக் கொள்வது பெரும் ராஜதந்திரம். அதுவும் குறுக்கு வழியால் பதவிக்கு வந்து, அதனைத் தக்க வைத்துக் கொள்ளும் அரச அதிகாரிகளுக்கு இந்தச் சாணக்கிய தந்திரம் நன்கு கை வந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் பதவியைத் தக்க வைத்து அதிகாரத்தில் நீடித்துக் கொள்ள முடியும்.

வடக்கில் ஓர் அதிகாரி. அங்கஜன் இராமநாதனின் செல்லப்பிள்ளையாகி, அவர் தயவில் நுழைந்தார். ஆட்சி மாற குத்துக்கரணம் அடித்து, டக்ளஸின் நம்பிக்கைக்கு உரியவராகி, பதவியை உறுதிப்படுத்தினார்.

இந்த இரு நிர்வாகங்களுடனும் ஒட்டி உறவாடியதில் பல விடயங்கள் விசாரணைக்குக் காத்திருக்கின்றன.

புதிய ஆட்சி வந்ததும் கதிரையிலிருந்து கல்தா தான் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். சத்தம் சந்தடியின்றி புதிய ஆளுநரும் காய்களை நகர்த்த இதோ மாற்றும் என்று பலரும் 05



# வெள்ள அனர்த்தத்துக்குப் பின்னரான தற்போதைய நிலைமை: பிரதேச செயலாளர்களுடன் யாழ். அரச அதிபர் கலந்துரையாடல்



வெள்ள அனர்த்தத்துக்குப் பின்னரான தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் யாழ்ப்பாணம் மாவட்ட

அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர், வெள்ள அனர்த்தத்தின்போது சிறப்பாகக் கடமையாற்றிய பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்ததுடன், தாம் பல பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருந்த மக்களின் குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டதாகவும், உடனடியாகத் தீர்க்க வேண்டிய விடயங்களுக்கு நடவடிக்கை எடுத்ததாகவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும் பார்வையிட்டதாகவும், சில கிராமங்களில் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான பொறிமுறையை உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுத்ததாகவும் தெரிவித்தார்.

மேலும், எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படாத வகையில் பல நிரந்தர திட்டங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்து செயற்படுவோம் எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும், பிரதேச செயலாளர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.



# இனவாதம் தலைதூக்க அனுமதிக்கமாட்டோம்

## அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவிப்பு



"தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மததீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக பயன்படுத்தியவர்கள் தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர்."

– இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், எந்தகாரணத்திற்காகவும் இனவாதம் தலைதூக்குவதற்கு அனுமதிக்கமாட்டோம் எனவும் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மததீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக எப்படி தேர்தல்வாக்களிப்பிற்கு முன்னர் பயன்படுத்தினார்கள் என உங்கள் மனச்சாட்சியை கேட்டுப்பாருங்கள்.

தேர்தல் காலத்தில் எங்களிற்கு எதிராக வேண்டுமென்றே பொய்களை பரப்பினார்கள்.

எங்களை தெரிவு செய்தால் மக்கள் தங்கள் மதநம்பிக்கைகளை பின்பற்ற முடியாத நிலை ஏற்படும் எங்களிற்கு எதிராக இந்த கதைகளை பரப்பியவர்கள் தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர்.

எந்தகாரணத்திற்காகவும் இனவாதம் தலைதூக்குவதற்கு அனுமதிக்கமாட்டோம்."– என்றார்.



# வடக்கு ஆளுநரைச் சந்தித்த இம்பக்ட் அமைப்பினர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொழில்சார் புலமையாளர்களை உள்ளடக்கிய இம்பக்ட் அமைப்பினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமது அமைப்பால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு அவர்கள் விவரித்ததுடன், மருத்துவத்துறையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்களை முன்னெடுப்பதிலுள்ள சவால்கள் தொடர்பிலும் அவற்றை எவ்வாறு நிவர்த்திக்கலாம் என்பது தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடினர்.

பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக மேம்பாடு தொடர்பிலும் தமது திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து ஆளுநருடன் கலந்துரையாடியதுடன், எதிர்காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்குத் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்க முடியும் எனவும் ஆளுநருக்கு உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் சிறுநீரக தொகுதி அறுவை சிகிச்சை நிபுணர் பா.பாலகோபி, யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட விரிவுரையாளர் சமுதாய மருத்துவ நிபுணர் எஸ்.குமரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் மகப்பேற்று அறுவைச் சிகிச்சை நிபுணர் சி.ரகுராமன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் சிறுநீரக வைத்திய நிபுணர் பிரம்மா ஆர். தங்கராஜா, பிரபல பௌதீகவியல் ஆசிரியர் ரா.குமரன், பத்திரிகை ஆசிரியர் எழுத்தாளர் ம. அருளினியன், பொறியியலாளர் ந.நந்தரூபன் ஆகியோர் பங்கேற்றனர்.

# மக்கள் துணிச்சலான முடிவை எடுத்தனர் பிரதமர் ஹரிணி அமரசூரிய பெருமிதம்

“மக்கள் துணிச்சலான முடிவை எடுத்துள்ளனர். அவர்கள் தெரிவிப்பதை செவிமடுங்கள்.”

– இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எங்கள் மக்கள் எங்கள் பிரஜைகள் எங்களை வித்தியாசமானவர்களாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். அவர்கள் துணிச்சலான முடிவை எடுத்துள்ளனர்.

இந்த தருணத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எங்களிற்கு இந்த தேசத்தின் பிரஜைகள் விடுத்துள்ள சவாலை கரங்களில் எடுங்கள் பொதுமக்கள் என்ன தெரிவிக்கின்றார்கள் என்பதை செவிமடுங்கள்,

நாங்கள் அனைவரும் இணைந்து இந்த தேசத்தை சிறந்த இடமாக மாற்றுவோம்.”– என்றார்.



# குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர் நியமனம்



சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 54 பேருக்கு உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக அந்த திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகக் கடமையாற்றிய மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எஸ். முத்துமால நியமிக்கப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகக்கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம். மங்கல தெஹிதெனிய, நுகேகொடை பிராந்தியத்திற்கு பொறுப்பான அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் பெரேரா, பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகள் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.யு.கே. லொகுஹெட்டி, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. மனதுங்க ஊடகப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ குற்றப்பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக செயற்படுகிறார்.

# அஸ்வெசும கொடுப்பனவு திட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி




அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவு 2023ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2024ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் மீள திருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பயனாளி குடும்பங்களுக்கு 4 வகையான சமூகப் பிரிவின் கீழ் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் வாழ்க்கை செலவுடன் ஒப்பிடுகையில் தற்போது வழங்கப்படும் தொகை போதுமானதல்ல என கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அஸ்வெசும கொடுப்பனவு முறையில் திருத்தம் மேற்கொள்வதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வறிய சமூக பிரிவுகளில் உள்ளவர்களுக்கான கொடுப்பனவை 8,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மிகவும் வறிய சமூகப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான கொடுப்பனவை 15,000 ரூபாவிலிருந்து 17,500 ரூபாவாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த திருத்தப்பட்ட அஸ்வெசும திட்டத்தை நாடாளுமன்றினால் அங்கீகரிக்கப்படும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதேநேரம், நிலையற்றவர்கள் என்ற சமூக பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான நலன்புரி கொடுப்பனவை அடுத்த வருடம் மார்ச் 31ஆம் திகதி வரை நீடிக்கவும், ஆபத்துக்கு உட்பட்டவர்கள் என்ற பிரிவில் உள்ளவர்களுக்கான கொடுப்பனவை அடுத்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை நகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை





பருத்தித்துறை நகரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக பல்வேறு இடங்களில் தற்போதும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதையடுத்து டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பரவும் அபாய நிலை காணப்படுகிறது.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் டெங்கு நோய் தடுப்பு பிரிவினரால் பருத்தித்துறை நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை டெங்கு ஒழிப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது பருத்தித்துறை நகர் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மற்றும் அவற்றுடன் அமைந்திருக்கும் காணிகள், கிணறுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டு, நுளம்பு குடம்பிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்போது, மழை நீர் தேங்கி நிற்கும் வகையில் சுற்றுச்சூழலை கொண்டுள்ள இடங்களின் உரிமையாளர்களுக்கு அவற்றை சுத்தம் செய்யுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காத்திருந்தனர்.

ஆனால், அதற்குள் அந்த அதிகாரி தனது சாணக்கிய தந்திரக் கைவரிசையைக் காட்டிச் சமாளித்து விட்டார் என்று இப்போது தகவல்.

யாழ்ப்பாணத்தைக் காட்டி, பின் கதவால் எம்.பியாகவும், பின்னர் மந்திரியாகவும் மாறி இருப்பவர் இப்போது தலையிட்டு மாற்றத்தைத் தடுத்து விட்டார் என்பது உள்வீட்டுத் தகவல்.

மெய்வன்மைத் துறையில் ஒரு விளையாட்டு உண்டு. தத்தி மிதித்து பாய்தல் (Hop, Step and Jump) என்றோ அல்லது முப்பாய்ச்சல் (Triple Jump) என்றோ கூறுவர்.

அதிலும் தாம் வல்லவர் என்று நிரூபித்திருக்கின்றார் அந்த அதிகாரி. அங்கஜனின் தலையில் தத்தி, டக்ளஸின் சிரசில் மிதித்து, இப்போதைய அமைச்சரின் தலையில் ஊன்றி, அழகாகப் பாய்கின்றார் அந்த அதிகாரி. அதனால் இப்போதும் பதவி காப்பாற்றப்படும் நிலைமை.

அவரை இப்போதைக்கு இடம் மாற்ற வேண்டாம், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என புதிய அமைச்சர் மேலிடத்தில் கூறிவிட்டாராம். அதனால் அந்த அதிகாரி அப்பதவியில் சிக்கலின்றித் தொடரப் போகின்றார்.

தந்திரம் தெரிந்தால் மந்திரம் தேவையில்லை. பதவியில் நீடிக்கலாம்.....!

+ + +

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் தலைவர்கள் தமது வருமான செலவு அறிக்கையை தனித்தனியாக தயாரித்து எதிர்வரும் 6 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் கையளிக்க வேண்டுமெனத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அது பற்றிய செய்தி தனியாக இன்றைய காலை முரசில் பிரசுரமாகி உள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறும் வேட்பாளர்கள் தரப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகள் இனித்தான் எடுக்கப்படும். அது வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.

ஆனால் அதற்கு முன்னர் ஏற்கனவே நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உரிய பொறுப்பை நிறைவேற்றத் தவறிய வேட்பாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் ஏற்கனவே பொலிஸ் தரப்புடன் இணைந்து ஆரம்பித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

இரண்டு வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சட்டத்துக்கு அமைய தேர்தல் ஆணையம் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் காரியம் இப்போது தேர்தல் ஆணையத்தில் நடந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான ஆவணங்களைத் தேர்தல் ஆணையம் பொலிஸ் தரப்பிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்து வருகின்றது.

இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பெயரில் சில தமிழ் கட்சிகள் சேர்ந்து களம் இறக்கிய அரியநேத்திரன். அவருக்குக் கயிறு கொடுத்து, ஏற்றிவிட்டு, களம் இறக்கிய கட்சிகளும், பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகள் என்று தங்களுக்கு நாமம் சூட்டி அடாத்துப் பண்ணிய பத்தி எழுத்தாளர்களும் – எல்லோரும் – இப்போது ஜாகா வாங்கிவிட்டு, அரியநேத்திரனை மாட்டிவிட்டு, நைஸாக ஒதுங்கி விட்டனர். கேட்டால் கூட்டுச் சேர்ந்த மற்றைய தரப்புகள் ஏமாற்றி விட்டன என்று தவறாமல் புலம்புவர் அவர்கள்.

கயிறு கொடுத்து மாட்டி விட்ட கட்சிகளோ பொது வேட்பாளர் என்ற பெயரில் 'சங்கு' மார்க் சின்னத்துக்கு கிடைத்த மவுசை குறுக்கு வழியில் கபளீகரம் செய்தும், பொதுத் தேர்தலில் தேற முடியாமல் அடிபட்டு கிடக்கும் வேதனையில் முடங்கியுள்ளன.

வரப் போகின்ற வழக்கை எதிர்கொள்வதற்கு இந்தத் தரப்புகள் யாரும் அரியநேத்திரனுக்குத் துணைக்கு வரப்போவதில்லை. பாவம் அவர் தானே தனக்குரிய சட்டப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். யாராவது தலையிட்டு சுமந்திரனிடம் பரிந்துரைத்தால், தன்னுடைய ஏனைய 'அரசியல் வில்லன்கள்' பலருக்கும் 'சும்மா' வாதாடுவது போல அரியநேத்திரனுக்கும் அவர் வாதாட முன்வரக்கூடும். அரியநேத்திரனுக்கு உரிய சட்ட பாதுகாப்பை வழங்க 'பத்தி எழுத்தாளர் அண்ட் கோ' முன்வராவிட்டால் நாங்கள்தான் அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அரியநேத்திரனும் நம்மவரே. அவர் பின்னாளில் அரசியல்வாதியானாலும் ஒரிஜினலில் அவர் ஊடகவியலாளர். 'தானடா விட்டாலும் சதையாடும்' என்பார்கள். என்ன, ஏது என்றாலும் அவரும் எங்கள் ஜாதி. ஊடகவியலாளர் அணி.

அவருக்கு சட்ட ரீதியாகப் பிரச்சனை ஒன்று என்றால், நாங்களும் களத்துக்கு வரவேண்டியது – அவருக்காக குரல் எழுப்ப வேண்டியது – எங்கள் கடமையே. பார்ப்போம் வரும்போது....!

தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரையில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க போகும் அடுத்த வேட்பாளர் யார் என்பது உங்களுக்கு ஆச்சரியம் தரலாம். அது – முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரச் செலவுகள் தொடர்பான கணக்கில் அவர் கணக்கு விட்டிருக்கின்றார் என்று தேர்தல் ஆணையம் கருதுவதாகக் கேள்வி. தேர்தல் ஆணையம் வகுத்த முறைமையின் அடிப்படையில் அவரின் வரவு – செலவு கணக்கு வரவில்லை என்று கூறப்படுகின்றது. உரிய முறைப்படி திருத்தம் செய்து தரும்படி தேர்தல் ஆணையம் வழங்கிய காலக்கெடுவையும் அவர் பயன்படுத்தாமல் உதாசீனம் செய்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது. ரணிலின் வழமையான பாணி அதுதான். விடயங்களை பொறுப்பின்றித் தூக்கி எறிந்து நடக்கும் அவரின் பழக்கம்.

இந்தத் தேர்தல் சட்ட விதிமுறை மீறலுக்காக வேட்பாளர்களின் குடியியல் உரிமை மூன்று ஆண்டுகள் வரை பறிக்கப்படக்கூடிய ஆபத்து உண்டு. இது விடயத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்று ரணிலும் நெருக்கடியை எதிர்கொண்டாலும் வியப்பதற்கு இல்லை.

+ + +

யாழ் மாவட்டத்தில் மொட்டுக் கட்சியை மக்கள் மத்தியில் நிலை நிறுத்த முன்னர், இதுவரை கட்சியின் வடக்கு நிர்வாகிகள் பண்ணிய திருகுதாளங்களைக் கழுவித் துடைத்து, நேசீர் செய்யவே அதன் யாழ் அமைப்பாளராகப் புதிதாக நியமனம் பெற்றிருக்கும் காசிலிங்கம் கீதநாத்துக்குப் போதும் போதும் என்றாகிவிடும் என்றே தோன்றுகின்றது.

நாமல் ராஜபக்ஷவின் பெயரை முன்நிறுத்தியே பல இடங்களில் 'அறவீடுகள்' நடந்திருப்பது பற்றிய அதிர்ச்சித் தகவல்கள் உண்டு. அவற்றைப் பிரித்து, ஆராய்ந்து, தீர்த்து, நல்ல பெயர் எடுக்கவே நீண்ட காலமும் தீவிர முயற்சியும் அதிகம் தேவை.

சுத்திகரிப்பு வேலைக்காக இன்றும் ஒரு விவகாரத்தை ஒட்டி வடக்கில் ஒரு பொலிஸ்நிலையத்தில்முன்னிலையாகிய வேண்டிய கட்டாயம் – இக்கட்டு – கட்சியின் புதிய அமைப்பாளருக்கு.

கட்சித் தலைவர்களின் பெயரைப் பயன்படுத்தி மக்களுக்கு நேரடியாக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எப்படியும் நீதி செய்வேன், நியாயத்தை நிலை நிறுத்துவேன் என்று புறப்பட்டிருக்கின்றார் கீதநாத்.

ஜெகதலப்பிரதாபன்களிடம் கட்சியின் யாழ் செயற்பாட்டை ஆரம்பத்தில் ஒப்படைத்த குற்றத்திற்காக மொட்டுக் கட்சியினர் இன்னும் பல நெருக்கடிகளை தாண்ட வேண்டி இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

'செத்தவன் பொண்டாட்டியைக் கட்டினாலும் விட்டவன் பொண்டாட்டியைக் கட்டக் கூடாது' என்ற பேச்சு வழக்கு நம் மத்தியில் உண்டு. இன்னொரு கட்சியில் திருகுதாளம் பண்ணி, நிதி மோசடிகளுடன் வெளியே தப்பி வந்தவர்களை, மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ சரியாக விசாரிக்காமல் அரவணைத்த குற்றத்திற்கான பொறுப்பை இப்போது கட்சியை மறுசீரமைக்க முயலும் நாமல் ராஜபக்ஷவும் அவரது பிரதிநிதியும் எதிர்கொள்கின்றனர். அதுவே நிலைமை.

---

## சுயநிர்ணய உரித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கையில் இனவாதத்தை எவரும் பேசக் கூடாது என ஆளுங்கட்சியினர் வலியுறுத்துவது எமக்குப் புதிய நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. எண்பது ஆண்டுகளின் முன்பிருந்த இலங்கையின் ஆட்சியாளர்களிடம் இத்தகைய

மனநிலை இருந்திருந்தால், தமிழினம் அடக்கப்பட்ட இனமாக, இனவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட இனமாக இத்தனை துயரங்களை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

கடந்த காலங்களில் தமிழர் தரப்பால் அரசுகளோடு மேற்கொள்ளப்பட்ட எந்தப் பேச்சுகளும் எமக்குச் சாதகமாக அமையவில்லை என்ற நம்பிக்கையீனங்களைக் கடந்து, புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் இனவாதமற்ற இலங்கை நாட்டில் தமிழர்களது சுயநிர்ணய உரித்துகள் அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகுமானால், நாங்கள் உங்களோடு இணைப் பங்காளர்களாகப் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம்.

இடதுசாரிக் கொள்கை அடிப்படையில் வளர்ச்சி கண்ட ஜே.வி.பியினரிடத்தே அடக்குமுறை இருக்காது என்றும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற மார்க்சிசமும், லெனினிசமும், சேகுவேரா, மாவோ சேதுங் போன்ற புரட்சியாளர்களின் சிந்தனைப் போக்கும் மேலோங்கியிருக்க வேண்டும் என்றுமே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீங்கள் சிந்திய இரத்தமும், செய்த தியாகமும் இன்று உங்களை இந்தச் சிம்மாசனத்தில் ஏற்றியிருப்பதைப் போல், ஈழ விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்களும், மக்களும் செய்த உயிர்த் தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் எங்கள் இனத்தின் இருப்பை உறுதி செய்யும் நிலையை உருவாக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்."

– என்றார்.

# சமூக ஊடக செயற்பாட்டாளர்களிற்கு எதிராக பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தும் அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு




சமூக ஊடக செயற்பாட்டாளர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவது நியாயமா? என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலின் போது தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கும் தற்போது இடம்பெறும் விடயங்களிற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என முன்னர் தெரிவித்திருந்தார்கள்,ஆனால் தற்போது ஊடக சுதந்திரத்தை கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தை பொதுமக்களின் உரிமைகளை கட்டுப்படுத்த பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்கள் மூலம் கிடைத்த ஆதரவு காரணமாகவே உங்களிற்கு இந்த ஆணை கிடைத்தது.

சமூக ஊடக செயற்பாட்டாளர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவது நியாயமா?."– என்றார்.

## அர்ச்சுனா எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இன்று (நேற்று) மதியம் 2.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் சென்றிருந்தேன். நேர ஒதுக்கீடு தொடர்பில் அங்கிருந்தவர்களிடம் வினவினேன். இன்று (நேற்று) எனக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. நாளை (இன்று) ஒதுக்கப்பட்டுள்ளதா எனக் கேட்கச் சென்றிருந்தேன். அங்கு அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் வேறொரு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

நாளை (இன்று) மாலை 4 மணியளவில் எனக்கு நேரம் வழங்க முடியும் எனக் கூறினர். நேர ஒதுக்கீடு பற்றிய நடைமுறை குறித்து கேட்டிருந்தேன். அப்போது சுஜித் (சுஜித் சஞ்சய் பெரேரா எம்.பி.) என்ற நபருடன் கதைக்க சொன்னார்கள். சுஜித் என்ற நபர் என்னைத் தாக்கினார். திருப்பித் தாக்க எனக்கு ஒரு நிமிடம் போதும். எனது தந்தையின் வயது அவருக்கு. அதனால் தாக்கவில்லை." – என்று அர்ச்சுனா சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார,

"யாழ். மாவட்ட எம்.பி. அர்ச்சுனா, எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்கு வந்து எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளரிடம் மோசமான முறையில் செயற்பட்டார். தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டார்.

இது தொடர்பில் நாம் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். சிலர் கல்வி கற்றிருந்தாலும் அறிவற்றவர்களாகவே செயற்படுகின்றனர்.

இது தொடர்பில் அவதானம் செலுத்திப் பொருத்தமற்ற எம்.பிக்களை எதிர்க்கட்சியில் அமரவிடாது வேறு இடத்தில் அமரச் செய்யுங்கள்." – என்றார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட சுஜித் சஞ்சய் பெரேரா எம்.பி.,

"அர்ச்சுனா எம்.பி. என் மீது பாரிய குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். அவ்வாறு எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை. அவரது குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். அவர் தான் எனக்கு அச்சுறுத்தல் விடுத்தார்." – என்றார்.

## ஜனாதிபதி - தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமர்வில், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

மாகாண சபை முறைமையை இல்லா தொழிக்கப் போவதாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் நேற்று நாடாளுமன்ற அமர்வின்போது கேள்வி எழுப்பப்பட்டது. தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் இது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை வினவினார்.

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கப் போவதாக ஊடகங்களுக்குக் குறிப்பிட்டிருந்த விடயத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருத வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் அரசு தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, இராசமாணிக்கம் சாணக்கியன் மீது மிகுந்த மரியாதை கொண்டிருப்பதாகவும், ஏனையோர் சொல்வதைக் கேட்டு முறையற்ற சந்தேகங்களை எழுப்ப வேண்டாம் என்றும் கோரினார்.

அதேநேரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் இது விடயமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடல் ஒன்று நடத்த அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவித்த பிமல் ரத்நாயக்க, ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அன்றி ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்துவதாகவும், இந்த விடயம் குறித்து பேச்சு நடத்தலாம் என்றும் குறிப்பிட்டார்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெல்லியடி பகுதியைச் சேர்ந்த ஓய்வுநிலை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உத்தியோகத்தரான இளையதம்பி சிவகுமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.


மேற்படி நபர் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள தனது தோட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாட்டை மேய்ச்சலுக்குக் கட்டச் சென்ற வேளை பாம்பு தீண்டியுள்ளது.

அதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.



Canadian Tamils' Chamber of Commerce
CTCC
கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

# COMMUNITY MEETING



## ON ADDRESSING RECENT JEWELRY STORE ROBBERIES

a public meeting to foster dialogue and collaboration among the police, city councilors, jewelry store owners, and other concerned businesspeople in our community.

சமீபத்தில் தமிழ் நகைக்கடைகளில் நடந்த கொள்ளை சம்பவங்கள்குறித்தும் அதையொட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் போலீஸ், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகை கடை உரிமையாளர்கள், மற்றும் தமிழ் சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ளும் சமூகக் கூட்டம்.

FRIDAY, DECEMBER 6TH, 2024
AT 3:00 PM
CTCC BUSINESS CENTRE
80 TRAVAIL ROAD, UNIT 1,
MARKHAM

JOIN US:
416-335-9791
info@ctcc.ca
www.ctcc.ca



Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரில்வினைச் சமாளிக்க முடியுமா?

"அரசியலில் தோல்வி கண்ட சில குழுக்கள் நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிக்கின்றன. இனவாதத்தைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்." - இவ்வாறு பிரதமர் ஹறிணி அமரசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறியிருக்கின்றார்.

உண்மைதான். அரசியலில் தோல்வி கண்ட தரப்புக்களும், அரசியல் அதிகாரத்தை இலக்கு வைக்கும் தரப்புக்களும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இலகுவாக கைக்கொள்ளும் மார்க்கம் இனவாதம் தான்.

சுதந்திர இலங்கையின் கடந்த முக்கால் நூற்றாண்டு கால அரசியல் சரித்திரம் அதனைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது. காலச்சக்கரம் சுழன்று பருவங்கள் மாறினாலும், காலநதி தடம் மாறாமல் ஓடிக்கொண்டிருப்பது போல, இனவாதத்தைக் கிளப்பும் தரப்புக்கள் மாறுகின்றமையைத்தவிர, இனவாதத்தைக்கிளப்பி, அதன் மூலம் பேரின மக்களைத் தூண்டி, அரசியல் செல்வாக்கைத் தேடும் இழிநிலை மட்டும் எப்போதும் மாறாத போக்காகவே இங்கு தொடர்கின்றது. அதுதான் இலங்கை அரசியலின் துன்பியல் நிலைமையாகும்.

இன்று இனவாதத்தை மீண்டும் தூக்குகிறார்கள் எனக் கவலையோடு நாடாளுமன்றத்தில் உபதேசம் - தத்துவம் - பேசத் தலைப்பட்டிருக்கும் பிரதமர் ஹறிணி அமரசூரிய, இது விடயத்தில் இரண்டு முக்கிய அம்சங்களை மறந்து விட்டு பேசுவதுதான் வேடிக்கை.

ஒன்று - இன்று, இனவாதம் பேசுபவர்கள் குறித்து விசனிக்கும் பிரதமர் ஹறிணி அமரசூரியவின் தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளர்களான ஜே.வி.பியினரின் நீண்ட கால பண்பியல்பாக நீடித்ததே இந்த இனவாதம் தான் - பேரினவாத மேலாதிக்கச் செல்நெறிப் போக்குதான் - என்பதை அவருக்கு நினைவூட்ட வேண்டியது இன்று காலத்தின் கட்டாயமாக உள்ளது.

எண்பதுகளின் இறுதியில் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் கட்டாயம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசுக்கு ஏற்பட்டபோது, அப்படி அதிகாரத்தைப் பகிர்வதற்கு எதிராக இனவாதக் காட்டுக் கூச்சலை எழுப்பி, ஆயுதம் தூக்கியதே இன்று ஹறிணி அமரசூரிய போன்றோர் கூட்டுச் சேர்ந்து அரசமைத்திருக்கும் ஜே.வி.பிதான்.

அடுத்தது - இப்போது எதிர் அணியில் சிலர் பேரினவாதத்தை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார்கள் என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய கூறுவது உண்மைதான். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, சரத் வீரசேகர, நவீன் திஸநாயக்க போன்றோர் அத்தகைய போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்கள் இந்தப் போக்குக் கொண்டவர்கள், பேரினவாதம் அவர்கள் இரத்தத்தில் ஊறியது என்பவை எல்லாம் மக்களுக்கு நன்கு தெரிந்த விடயங்கள். அவர்கள் இன்றைய அரசியல் சூழலில் பேரினவாதத்தைத் தனித்துக் கிளப்பி, பெரும் அரசியல் செல்வாக்கை - ஆதரவை - பெற்றுக் கொள்வது என்பது சாத்தியம் குறைந்த விடயம்தான். துர்லபம்தான்.

ஆனால், இவர்களை எல்லாம் மிஞ்சும் வகையில் பேரினவாதத்தை கிளப்பி, பேரினவாத விவகாரத்தில் இவர்களுக்கும் சேர்த்து தலைமை வகித்து, அந்தப் பெரும் தேசிய வாத மேலாதிக்க வெறியைத் தூண்டி விடக் கூடியவர்கள் தங்கள் பக்கத்தில் தான் செல்வாக்கோடு இருக்கிறார்கள் என்பதை பிரதமர் ஹறிணி அமரசூரிய கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆட்சியில் - அரசு அதிகாரத்தில் - பதவி ஏதும் வேண்டாம் என்று உருத்திராட்சப் பூனை போல பதுங்கி இருக்கும் ரில்வின் சில்வாதான் அவர். இந்த ஆட்சியை ஆட்டிப் படைத்துத் தீர்மானிக்கும் வலிமை கொண்ட ஜே.வி.பியின் செயலாளர் அவர்தான். ஆட்சியை நடத்தும் கட்சியின் லகான் - கடிவாளம் - அவரிடம்தான் இருக்கின்றது.

அவர் கிளப்பத் தொடங்கி இருக்கும் - இப்போது கிளப்பி வரும் - இனவாதத்தை பிரதமர் ஹறிணி அமரசூரிய போன்றோர் எப்படித் தடுக்க போகின்றார்கள், அதற்கு முகம் கொடுக்க போகின்றார்கள்...? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!






# நடராஜா மதீந்திரனின் நினைவாக வெளியிடப்பட்டது அஞ்சல் முத்திரை

தமிழ்ப் பண்பாட்டு வலையம் பிரான்ஸ் மற்றும் பிரான்சின் அஞ்சல் சேவையான La Poste உடன் இணைந்து, 2012ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள், பாரிஸில் இலங்கை அரசின் கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் கேணல் பரிதி என்று அழைக்கப்பட்ட நடராஜா மதீந்திரனின் நினைவாக அஞ்சல் முத்திரை வெளியீட்டு நிகழ்வை நடத்தியது.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ், Bobigny நகரசபையின் Salon d’honneur de l’Hôtel de Ville மண்டபத்தில் நடைபெற்றது.

நடராஜா மதீந்திரனின் தாயார் தருமதி நடராஜா கமலாம்பிகை மற்றும் Bobigny efugpjh Abdel Sadi ஆகியோர் இணைந்து முத்திரையை வெளியிட்டனர். முதல் முத்திரையை பிரான்ஸ் தமிழர் வர்த்தக சங்கத்தின் தலைவர் இரா. சிறிதரன் பெற்றுக்கொண்டார்.












# அவசரகால இராணுவச் சட்டத்தை அறிவித்தது தென் கொரிய ஜனாதிபதி



தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் (Yoon Suk Yeol) அவசரகால இராணுவச் சட்டத்தை அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு விடுத்த விசேட உரையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வட கொரியாவின் கம்யூனிஸ்ட் சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், தேச விரோத சக்திகளை அகற்றவும் இந்த சட்டம் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யூன் சுக் யோலின் மக்கள் அதிகாரக் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியும் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டுத் திட்ட சட்ட மூலத்தில் தொடர்ந்து உடன்படாத நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதை தவிர வேறு வழியில்லை என தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த சட்ட அமுலாக்கத்தின் ஊடாக எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

# இஸ்ரேலில் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி பயன்படுத்த தடை



இஸ்ரேல் நாட்டில் உள்ள பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்குமாறு அந்நாட்டின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் இதாமர் பென் க்விர் (Itamar Ben Gvir) பொலிஸுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், பள்ளிவாசல்களில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் எனவும் தடையை மீறி ஒலிபெருக்கிகள் பயன்படுத்தும் பள்ளிவாசல்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் பொலிஸாருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் இதாமர் பென் க்விர்,

"பள்ளிவாசல்களிலிருந்து வரும் சத்தம் இஸ்ரேல் மக்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

பெரும்பாலான மேற்கத்திய நாடுகளும், சில அரபு நாடுகளும் கூட, ஒலிபெருக்கி சத்தம் தொடர்பான விடயத்தில் பல சட்டங்களை இயற்றியுள்ளன" என்று பதிவிட்டுள்ளார்.

இஸ்ரேல் அரசாங்கத்தின் இந்த உத்தரவுக்கு அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

# இம்ரான் கானை விடுதலை செய்யக் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 96 பேருக்கு பிடியாணை



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுதலை செய்யுமாறு கோரி இஸ்லாமாபாத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்ட 96 பேருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இம்ரான் கான், அவரது மனைவி, கைபர் பக்துன்க்வா மாகாண முதல்வர் உள்ளிட்ட 96 பேருக்கு எதிராகவே பிணையில் விடுவிக்க முடியாத வகையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த நவம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஏற்பட்ட அமைதியின்மையில் 12 பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர்.





# விஜய் குறித்து அண்ணாமலை பேசியமை விளம்பரம் தேடுவதற்கான முயற்சியாகும்

## த.வெ.க. விமர்சனம்

விஜய் குறித்து அண்ணாமலை பேசியது விளம்பர உத்தி என்று த.வெ.க. விமர்சனம் செய்துள்ளது.

இதுகுறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில செய்தி தொடர்பாளர் எஸ்.ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைகள் குறித்து திட்டமிட்டு பரப்பப்படும் பொய் பிரச்சார விளம்பர பேச்சுகள் முற்றிலும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட கருத்தாகும்.

மதச்சார்பற்ற சமூக நீதி என்ற கொள்கையை முன்வைத்து த.வெ.க. பயணிக்கிறது. திராவிடம், தமிழ் தேசியம் என எந்த அடையாளத்துக்கு உள்ளாகவும் சுருங்க விரும்பவில்லை என கொள்கை பிரகடன மாநாட்டில் கட்சி தலைவர் விஜய் அறிவித்த பிறகும், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை புரிதல் இன்றி பேசியுள்ளார். இது விளம்பர உத்தியாக, நீண்ட நாள் கழித்து தமிழகம் திரும்பியுள்ள அவருக்கு ஒரு வெளிச்சம் தேடும் முயற்சியாகவே பார்க்கிறோம். தமிழக மக்கள் எல்லா வகை உணவும் உண்பார்களே தவிர, மதவாதம் எனும் நஞ்சினை ஒருகாலமும் உண்ண மாட்டார்கள்.

மத்தியில் பா.ஜ.க. அதிகாரத்தில் இல்லையென்றால் தமிழ்நாட்டில் இவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் சென்றுவிடுவார்கள். பன்முக தன்மை கொண்ட தேசத்தில், குறிப்பாக அதை பெரிதும் போற்றும் தமிழக மக்கள் ஒற்றை உணவுபோல ‘ஒரே மதம், ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே தேர்வு’ என்பது போன்ற திட்டமிடப்பட்ட பன்முக சிதைவுகளை ஒருகாலமும் அனுமதிக்க மாட்டார்கள். 2026 சட்டப்பேரவை தேர்தலில் த.வெ.கவை தனி பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர வைத்து, அறுசுவை உணவுடன் எங்கள் கொள்கை எதிரியான பா.ஜ.கவுக்கும், அரசியல் எதிரியான தி.மு.கவுக்கும் விருந்து வைப்பார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கருத்து தெரிவிக்கையில்,

“திரைத்துறையில் உச்சத்தில் இருக்கும்போதே, அரசியலில் கால் பதித்த நடிகர் விஜய்யை வரவேற்கிறோம். அவர் முழுநேர அரசியலுக்கு வந்து, அவரது கருத்துகளை முன்வைக்கும்போது, பாஜகவும் தனது கருத்துக்களை மக்கள் முன்பு வைக்கும். திராவிட கட்சிகளின் சித்தாந்தத்தைதான் விஜய்யும் பேசுகிறார். அவரது கொள்கை கிட்டத்தட்ட திராவிட கட்சிகளோடு தான் ஒத்துப்போகிறது.

புதிதாக அரசியலுக்கு வருபவர்களை கண்டு பா.ஜ.க. எப்போது பயப்படாது. நடிப்பு என்பது வேறு. அரசியல் களம் என்பது வேறு. ஒக்டோபர் 28 ஆம் திகதிக்கு பிறகு நடிகர் விஜய் எத்தனை முறை வெளியே வந்திருக்கிறார். அவரை கேள்விக் கேட்க வேண்டிய இடத்தில் நாங்கள் கேள்வி கேட்போம். இன்றைய சூழலில் திராவிட கட்சிகளின் வாக்குகள் மூன்றாக பிரிந்திருக்கிறது. பாஜகவின் வாக்கு அதிகரித்து வருகிறது.” என்று குறிப்பிட்டிருந்தார்.

# இந்திய – சீன உறவில் முன்னேற்றம்: மக்களவையில் ஜெய்சங்கர் தகவல்

சீனாவுடனான இந்தியாவின் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம் அளித்தார்.

மக்களவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பேசும்போது,

“இந்திய – சீன உறவில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எல்லைப் பிரச்சினையை தீர்க்க பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. எல்லைப் பகுதியில் இயல்பு நிலை திரும்ப உடன்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளிடையே, எல்லைப் பகுதிகளை நிர்வாகம் செய்வதில் பரஸ்பர ஒத்துழைப்பு இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இரு நாடுகளிடையே இருந்த பிரச்சினைகள் படிப்படியாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள சிக்கல்களை தீர்க்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.” – என்றார்.

இந்தியா – சீனா இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சினை உள்ளது. எல்லைகள் இதுவரை துல்லியமாக வரையறை செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக, எல்.ஏ.சி. எனப்படும் அசல் எல்லை கட்டுப்பாடு கோடு நிர்ணயிக்கப்பட்டு, இரு நாட்டு இராணுவத்தினரும் அவரவர் பகுதியில் ரோந்து சென்றுகின்றனர். இந்நிலையில், கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் 2020 இல் ஏற்பட்ட மோதலில் இந்திய ராணுவத்தினர் 20 பேர் கொல்லப்பட்டனர். பதிலுக்கு இந்தியாவும் தாக்குதல் நடத்தியது.



இதையடுத்து இரு நாடுகளின் உறவு முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதிக்கப்பட்டது. இருநாட்டு இராணுவத்தினரும், நேருக்கு நேர் மோதும் வகையில் எல்லையில் படைகளை குவித்தனர். இதற்கு தீர்வு காண்பதற்காக கடந்த 4 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வந்தது. அதன் முடிவாக, கடந்த அக்டோபர் மாதம் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் உடன்பாடு ஏற்பட்டது.



# தமிழரின் உணர்வை பாதிக்கும் வகையில் அரசு செயற்படக்கூடாது

## ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுமாயின், அது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் செயல் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சிப்பீடமேறியுள்ள தற்போதைய அரசால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பில் 13 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படும் என்று ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களுள் ஒருவரான ரில்வின் சில்வாவினால் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகத்தால் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"தற்போதைய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு என்பது, இதுவரை காலமும் கௌரவமான அரசியல் உரிமைகளை இந்த நாட்டிலே பெற்றுக்கொள்வதற்காகத் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்கு கிடைத்துள்ள சிறிதளவான பரிகாரமாகவே நோக்கப்படுகின்றது.

மாகாண சபை முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கான தீர்வைக் காண முடியும் என்பதை ஈ.பி.டி பி. கட்சியினராகி நாமும் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் 13 ஆம் திருத்தச் சட்டத்தினை பாதுகாப்பதற்காக பல்வேறு முயற்சிகளையும் நாம் மேற்கொண்டிருந்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

குறிப்பாக 2010 - 2015 காலப் பகுதியிலும் 13ஆம் திருத்தச்சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சியை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்த அப்போதைய ஆட்சியாளர்கள் முன்னெடுத்திருந்த நிலையில், அரசின் அங்கமாக நாம் இருந்த போதிலும், ஆளும் தரப்பில் அப்போதிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த முற்போக்காளர்களான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எமது ஆட்சேபனையை வெளிப்படுத்திய நிலையில் அந்த முயற்சிகைவிடப்பட்டிருந்தது.

அண்மையில் சிநேகிதபூர்வமாக உங்களைச் சந்தித்த வேளையிலும், 13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதனைக் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமான பொறிமுறையாக இருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அத்துடன், அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற நிலையில், அவர்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு, புதிய அரசமைப்பு தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னர் தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்திப் பாதுகாக்க வேண்டிய தார்மீகக் கடமை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆக, உங்களுக்கு இருக்கும் தார்மீகக் கடப்பாட்டின் அடிப்படையிலும், தேர்தல் காலத்தில் எமது மக்களுக்கு நீங்கள் வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையிலும் 13 ஆம் திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்பதோடு மாகாண சபைகளுக்கான தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்." - என்றுள்ளது.

# ஒத்திவைக்கப்பட்ட உயர்தரப் பரீட்சை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலத்த மழையுடனான வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளால் உயர்தரப் பரீட்சை இரண்டு சந்தர்ப்பங்களில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், இன்று முதல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கால அட்டவணைக்கு அமைய பரீட்சை நடத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

அதற்கமைய, ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளை எதிர்வரும் டிசம்பர் 21ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதா நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

போக்குவரத்து சிக்கல்களால் தமக்கான பரீட்சை நிலையத்திற்கு செல்ல முடியாதுள்ள பரீட்சார்த்திகளுக்கு அருகிலுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.




# 6 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் தேர்தல் செலவை கையளிக்கவும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயாதீன குழுக்களின் தலைவர்கள் தமது வருமான செலவு அறிக்கையை தனித்தனியாக தயாரித்து எதிர்வரும் 6 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு வேட்பாளரும் தாம் போட்டியிட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் செயலகத்திற்கும் செலவு அறிக்கையை கையளிக்க வேண்டும் என ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கைகளை பொறுப்பேற்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் விசேட கருமபீடம், வார நாள்களில் மாலை 6 மணி வரையிலும் எதிர்வரும் 6ஆம் திகதி இரவு 12 மணி வரையிலும் திறக்கப்பட்டிருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய தினத்திற்கு முன்னதாக செலவு அறிக்கைசமர்ப்பிக்கப்படாமைதொடர்பில் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.



## வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்தால்

# சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட யானை சிகிச்சை பலனின்றி மரணம்!

(கி.வசந்தன்)

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானை நேற்று மரணமடைந்தது என்று வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா குடாகச்சக்கொடி வயல் வெளியில் சுகயீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கடந்த ஐந்து நாட்களாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே அது மரணமடைந்தது.

இதேவேளை, அந்த யானையின் மரணம் தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவுள்ளது.

# கைதான 18 இந்திய மீனவர்களுக்கும் டிசம்பர் 10 ஆம் திகதி வரை மறியல்!



(எஸ்.நிதர்ஷன்)

எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதான இந்திய மீனவர்களுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஒரு படகில் வந்த 18 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து, எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி 18 இந்திய மீனவர்களும் யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை மீனவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வவுனியா பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை குழப்ப நிலை

## நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல்



(கி.வசந்தன்)

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அரச, தனியார் பஸ் தரப்பினருக்கு இடையில் முண்பாடு ஏற்பட்டமையால் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த அரச பஸ் தரப்பினருக்கும், தனியார் பஸ் தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அரச பஸ் புறப்படுகின்ற நேரம் தொடர்பிலேயே குறித்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பஸ் நிலையப் பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, பஸ் நிலையத்தில் கடமையாற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்து அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், அரச பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2024




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park